**செய்தி வெளியீடு** **நாள்: 11.7.2025**

**வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் தங்கசாலை, வள்ளலார் நகர் பேருந்து நிலையம் விரைவில் பணிகள் முடிக்கப்பட்டு 2025 டிசம்பர் மாதத்திற்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.**

**மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தகவல்**

*****

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று (11.7.2025) மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சிஎம்டிஏ சார்பில் ரூ.6.27 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுவரும் **கொளத்தூர் ஏரி,** ரூ.14.31 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுவரும் **இராயபுரம் சமூகநலக் கூடம்** மற்றும் ரூ.6 கோடி மதிப்பீட்டில் **தங்கசாலை, வள்ளலார்நகர் பேருந்து நிலையம் கட்டுமானப் பணிகள் நடைபெறுவதை முன்னிட்டு,** இராயபுரம் மாநகராட்சி மண்டல அலுவலகம் அருகில் **தற்காலிக பேருந்து நிலையம் அமைப்பதற்கான இடத்தினை** நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார்.

**மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ், ரூபாய் 6,000 கோடி மதிப்பீட்டில் 252 பணிகள் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிகளில், தற்போது 80% வேலைகளுக்கு ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. அதில் 25%, 50%, 70% என பல கட்டங்களில் பணிகள் முடிவடைந்துள்ளன. இந்த நிலையில், வரும் 2025 டிசம்பர் மாதத்திற்குள் குறைந்தது 50%க்கும் மேற்பட்ட பணிகளை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும் என **மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்** தொடர்ந்து ஆய்வு கூட்டங்களை நடத்தி வருகிறார்.

அந்த வகையில், இன்று காலை கொளத்தூரில் அமையவுள்ள ஏரியை மேம்படுத்தும் பணியை பெருநகர மேயர் அவர்கள், எங்கள் துறையின் உறுப்பினர் செயலாளர் திரு.பிரகாஷ் அவர்கள், வட்டார துணை ஆணையாளர் திரு.கௌஷிக் அவர்கள், நீர்வளத்துறை, பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை, சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றுத் துறை, ஆகியோர் இணைந்து நேரில் ஆய்வு செய்தோம்.

அந்த ஏரியை அழகிய பொழுதுபோக்கு வசதிகள், உடற்பயிற்சி கூடங்கள், நடைபாதைகள் ஆகியவுடன் கூடிய ஏரியாக மாற்றும் பணிகளை விரைவுபடுத்தவே இன்றைய இந்த ஆய்வு நடத்தப்பட்டது. இந்த ஏரியை நவம்பர் மாதத்திற்குள் மக்களுக்குப் பயன்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதனைத் தொடர்ந்து, தங்கசாலை, வள்ளலார் நகர் பேருந்து நிலையம் — நினைவில் வாழும் கலைஞர் அவர்களின் பெயரில் வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் சார்பில் ரூ.6 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படுகிறது. இரண்டு நாட்களுக்கு முன், இந்த தொகுதியின் சட்டப்பேரவை உறுப்பினர் திரு. ‘ஐட்ரீம்ஸ் மூர்த்தி அவர்கள், மாமன்ற உறுப்பினர் திருமதி. வேளாங்கண்ணி ஆகியோருடன் இணைந்து, வள்ளலார் நகர் பேருந்து நிலையத்தின் கால்கோள் விழாவை தொடங்கி வைத்தோம். புதிய கட்டுமான பணிகளுக்காக, தற்போதைய பயணிகளின் நலனை கருத்தில் கொண்டு, அருகிலுள்ள இரண்டு இடங்களில் தற்காலிக பேருந்து நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர் டாக்டர் பிரபுசங்கர் அவர்களுடன் ஆய்வு செய்து, ரயில்வே குடியிருப்பு பகுதி மற்றும் ஒரு வங்கியினுடைய இடம் ஆகிய இரண்டில் ஏற்றதான இடம் தேர்ந்தெடுக்கப்படும். நிரந்தர பேருந்து நிலையத்தை 2025 டிசம்பர் மாதத்திற்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது.

இதுபோன்ற வளர்ச்சி பணிகளை நாங்கள் தினமும் நேரில் சென்று ஆய்வு செய்து, முடிக்க வேண்டிய பணிகளை விரைவாக மேற்கொண்டு, வடசென்னை மக்களுக்காக பயன்படுத்தும் வகையில் செயல்படுகிறோம்.

**இவ்வாறு மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்தார்.**

இந்த ஆய்வுகளின்போது மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா, இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு.ஐட்ரீம் இரா.மூர்த்தி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர் டாக்டர் த.பிரபுசங்கர், இ.ஆ.ப., மண்டலக் குழுத்தலைவர்கள் திரு.பி.ஸ்ரீராமுலு, திருமதி.சரிதா மகேஷ்குமார், சிஎம்டிஏ தலைமைத் திட்ட அமைப்பாளர் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, தலைமைப் பொறியாளர் திரு.மகாவிஷ்ணு, எம்.டி.சி. பொது மேலாளர் (இயக்கம்) திரு.எஸ்.நெடுஞ்செழியன், கண்காணிப்புப் பொறியாளர்கள் திரு.ராஜமகேஷ்குமார், திரு.பாலமுருகன், சென்னை குடிநீர் வடிகால் வாரிய கண்காணிப்பு பொறியாளர்கள் திரு.ராதாகிருஷ்ணன், திரு.சிவக்குமார், மாநகராட்சி மண்டல அலுவலர்கள் திரு.சொக்கலிங்கம், திரு.சரவணன், செயற்பொறியாளர்கள் திரு.லோகேஷ்வர், திரு.சதிஷ், சிஎம்டிஏ செயற்பொறியாளர் திரு.ராஜன்பாபு, நீர்வள ஆதாரத்துறை செயற்பொறியாளர் திரு.செல்வக்குமார், மாமன்ற உறுப்பினர்கள் திரு.நாகராஜன், திருமதி.வேளாங்கண்ணி, உள்ளாட்சி பிரதிநிதிகள் திரு.ஐ.சி.எப். முரளிதரன், திரு.மகேஷ்குமார், கொளத்தூர் வட்டாட்சியர் திருமதி.அபர்ணா மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

Verified by RealEstate